அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 21/2024

எனது இல : EST-6/04/LON/0207
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2024.12.24

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க அலுவலர்களுக்கான விஷேட முற்பணம் – 2025 ஆம் ஆண்டு**

2015.12.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 26/2015 தொடர்பாக தங்களது அவதானம் ஈர்க்கப்படுகின்றது.

02. அச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் "2015 ஆம் ஆண்டு" என்பதற்குப் பதிலாக "2024 ஆம் ஆண்டு" என்பதனை பிரதியீடு செய்வதற்கும் மற்றும் சுற்றறிக்கையின் "2016 ஆம் ஆண்டு" என குறிக்கப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் "2025 ஆம் ஆண்டு" என பிரதியீடு செய்வதற்கு கீழ்ப்பட்டு அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2025 ஆம் ஆண்டுக்காக ரூபா. 4000/- இனை விட மேற்படாத விஷேட முற்பணத் தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

03. இம் முற்பணக் கொடுப்பனவுகள் 2025.01.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2025.02.28 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டியுள்ளதுடன், 2025.02.28 ஆந் திகதிக்குப் பின்னர் இம் முற்பண கொடுப்பனவுகள் செலுத்தப்படலாகாது. இம் முற்பணமானது 2025 ஆம் ஆண்டினுள்ளே அறவிட்டு முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும்.

04. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./ எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112-699399
தொலைநகல் இலக்கம் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ade-vi@pubad.gov.lk